மாண்புமிகு திரு. எஸ். ஜே.. சாதிக் பாஷா : (அ) and (இ) மதுரை மருத்துவக் கல்லூரியில் குடிதண்ணீர் வசதிக்காக ஒரு ஆழமான துளைக் கிணறுகட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அது சம்பந்தமான வேலைகள் முடிவடைந்து அக்கல்லூரி விடுதிகளுக்கு 1967-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

Fishery Rentals

*130 *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Panchayats which are at present given fishery rentals ?

குளமகசூல்

திரு: என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தற்போது எத்தனை பஞ்சாயத்துக்களுக்குக் குளமகசூல் கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : தகவல்கள் சேர்க்கப்படுகின்றன.

Mr. CHAIRMAN : Questions are over.

II.—ANNOUNCEMENTS

(1) MESSAGE FROM THE GOVERNOR

Mr. CHAIRMAN : I have received the following message, dated the 21st February 1968 from the Governor of Madras:—

'I have received with great satisfaction your resoultion of thanks for the Address with which I opened the present session of the Legislature'.

(2) NOMINATION OF A MEMBER TO BUSINESS ADVISORY COMMITTEE

Mr. CHAIRMAN : I have to announce to the House that under rule 166 (4) of the Madras Legislative Council Rules, I have nominated Thiru K. Ramadass, M.L.C., as a Member of the Business Advisory Committee for the year 1967–68 in the vacancy casued by the resignation of the membership of Thiru R. Venkataraman.

III.—PRESENTATION OF THE BUDGET FOR 1968–69

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை, முறைப்படி, இம் மன்றத்தின் முன் வைக்கவேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். இவ் வரவு-செலவுத் திட்டத்தின்கண் இடம் பெற்றுள்ள வேலைத் திட்டங்களையும், அவற்றிற்கான நிதி ஒதுக்கங்களையும் குறித்து ஓரளவு விரிவாக விளக்கும் வகையில், இன்று காலை சட்டப் பேரவையில் நான் ஆற்றிய உரையின் படிகள்* மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, கூறியது கூறாமல், எனது இவ்வுரையில் நமது மாநில நிதி நிலையின் பொதுவான சில போக்குகளையும், இவ் வரவு-செலவுத் திட்டத்தின் உட்கிடக்கையாகவுள்ள சில கோட்பாடுகளையும் குறித்து, இம் மன்றத்தின் நாட்டத்தை ஈர்ப்பதே சாலும் என்று நினைக்கின்றேன்.

---

*Printed as Appendix II on pages 30–153